விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

வார 87 ஆடி 14 ஜூல்ஹஜ் 10 இதழ் 169

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29 7 1985

இனப்பிரச்னைத் தீர்வு

"ராஜீவின் ராஜதந்திரத்தை ஜே. ஆர். பின்பற்றவேண்டும்"

— அமிர்

(சென்னை)

"இலங்கைப் பிரச்னையைத் தீர்க்கும் விடயத்தில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் ராஜதந்திரத்தை ஜனாதிபதி ஜயவர்த்தனா பின்பற்ற வேண்டும்" என்று தமிழரி விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம்திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களுக்கு மத்தியில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இனப்பிரச்னை தீர்வினுக்காக இலங்கை அரசினால் இதுவரை உருப்படியான அல்லது திருப்திகரமான யோசனைகள் எதுவும் முன்வைக்கப் (6-ம் பக்கம் பார்க்க)

தனிநாடே உறுதியான முடிவு

எதிர்வரும் திம்பு பேச்சில் புதிய யோசனைகளுக்கு இடமில்லை!

கூட்டணி கருத்து

(இ. கந்தசாமி)

எதிர்வரும் 'திம்பு' பேச்சுக்களில் தனிநாட்டுக் கோரிக்கைதவிர்ந்த எந்த ஒரு யோசனையையும் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிதாக முன்வைக்க மாட்டாது. அரச தரப்பினரே தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக அல்லது சமானமாகப் புதிய யோசனைகளை முன்வைக்கவேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பேச்சாளர் ஒருவர் எதிர்வரும் 'திம்பு' பேச்சுக் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

த. வி. கூ. நிலைப்பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் எதிர்வரும் திம்புப் பேச்சுக்களில் புதிதாக எதுவித யோசனைகளும் முன்வைப்பதற்கில்லை.

'தனித்தமிழ் நாட்டை அடைக்கவே தமிழ்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு அங்கீகாரம் அளித்துள்ளார்கள்.

இதனை மீறி எந்த ஒரு யோசனையையும் கூட்டணி முன்வைக்காது. 'தனிநாடு' என்பதே கூட்டணியின் முடிவாகும்.

இதற்கிடையில் அரசதரப்பினரே புதிய யோசனைகளைத் (6-ம் பக்கம் பார்க்க)

முல்லை மாவட்டத்தில்

96 பாடசாலைகளில் 86 மட்டுமே இயங்குகின்றன

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 96 பாடசாலைகளில் இப்பொழுது 86 பாடசாலைகள் மட்டும் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்கிளாய் கருநாட்டுக்கேணி ஆகிய இடங்கள் பாதுகாப்புவலயத்துள் இருப்பதால் அங்குள்ள 3 பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும் இங்குள்ள சிங்களவர்கள் கொழும்பு சென்றுள்ளதால் அவர்களின் இரு பாடசாலைகளும்மூடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக் (6-ம் பக்கம் பார்க்க)

இலங்கைப் பிரச்னைக்கு

சமஷ்டி ஆட்சிமுறையே தீர்வாக அமையும்!

தமிழக கம்யூனிஸ்ட் பிரமுகர்

(சென்னை)

"இலங்கைத் தமிழ் மக்களின் மாநில சுயாட்சி முறையை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி ஆதிதான் இனப்பிரச்னை தீர்வினுக்குவழி வகுக்கும் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுப்பது அவசியம்" என்று இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநில செயலாளர் திரு. ஏ. நல்லசிவம் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கை தமிழ் மக்களின் பிரச்னையை தீர்க்க ஜயவர்த்தன (6-ம் பக்கம் பார்க்க)

பூட்டானில் 'பொது முடிவு'

அனைத்து தமிழ்குழுக்களும் இவ்வாரம் தீர்மானம்!

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஐந்து குழுக்களும் இந்த வாரத்தில் சென்னையில் சந்திக்கவுள்ளன.

இச்சந்திப்பின்போது ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி பூட்டானில் இடம்பெறவுள்ள இனப் பிரச்னை குறித்த பேச்சுவார்த்தையில் தமிழர் பிரதிநிதிகள் கலந்துகொள்வது சம்பந்தமாகப் பொதுவான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று நமது தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியப்படுகின்றது. (ரா)

★ கொழும்பு மெயில் ரயிலில்

தமிழர் பிரச்னைகளை விளக்கும் போஸ்ட்டர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் கொழும்பு நோக்கிச் சென்ற தபால் சேவை ரயில் வண்டியில், தமிழர் பிரச்னைகளை விளக்கும் பல்வேறு 'போஸ்டர்கள்' ஒட்டப்பட்டு அனுப்பப்பட்டது.

கொடிகாமம் ரயில் நிலையத்திலேயே அந்த ரயில் வண்டி நிறுத்தப்பட்டு சில இளைஞர்களால் அதில் போஸ்டர்கள் முழு அளவில் ஒட்டப்பட்டன.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தபால் சேவை ரயில் கொடிகாமத்தை அடைந்தபோது சுமார் 25 இளைஞர்கள் ரயிலில் ஏறினார்களாம். இவர்கள் ரயிலை ஓடவேண்டாமென்று பணித்ததுடன், ரயிலின் சகல பகுதிகளிலும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பல போஸ்டர்களை ஒட்டினர்.

இச்சம்பவத்தினால் ரயில் ஏறக்குறைய 2 மணிநேரம் தாமதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் 90 விதமான பிரயாணிகள் ரயிலிலிருந்து இறங்கி வீடு செல்லத் தொடங்கிவிட்டனர். குறைந்த பிரயாணிகளுடன் ரயில் 2 மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டதாம். கொடிகாமத்தில் இறங்கிய பிரயாணிகளை அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல இளைஞர்கள் வாகனங்கள்மூலம் (6-ம் பக்கம் பார்க்க)

துயரச்செய்தி கேட்டு மாரடைப்பால் மரணம்

(மானிப்பாய்)

மகன் வெளிநாட்டில் விபத்தால் மரணமான செய்தி கேட்டுத் தாய் மாரடைப்பால் காலமான துயரச் சம்பவம் ஒன்று ஆனைக்கோட்டையில் நிகழ்ந்துள்ளது.

வெளிநாட்டில் வேலை பார்த்துவந்த தனது மகன் கார் விபத்தில் பலியான செய்தி கேட்ட தாய் மாரடைப்பால் காலமானார்.

பேச்சுக்களில் தாமதம்

ராணுவம் கொலைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறது

கருணாநிதி கண்டனம்!

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தைகளில் காலதாமதம் செய்து அந்நாட்டு ராணுவம் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றுவருகின்றது" என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் நிருபர்களுக்கு மத்தியில் பேசும் (6-ம் பக்கம் பார்க்க)

"ஆயுதங்களைக் கீழே போடவேண்டாம்"

நவசமசமாஜ பத்திரிகை

(யாழ்ப்பாணம்)

"ஒருகணமேனும் ஆயுதங்களைக் கீழே வைக்காதீர்கள். எதிரி நிராயுதபாணியாகவிருக்கும் வரை ஆயுதத்தை கையில் வைத்திருப்பது பாதுகாப்பாகும். என்று தமிழ் தீவிரவாதிகளுக்கு நவசமசமாஜக்கட்சியின் இடதுசாரிப் பத்திரிகையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழி அதுவே என்றும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பூட்டான் பேச்சுவார்த்தைகாவது கொடுக்கும் சதியா? என்றும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ250/- ரூபா. தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 4676

மானிப்பாய் பட்டினசபையையும் சுதுமலை அம்மன் கோவிலையும் இணைக்கும் ஒழுங்கையில் காலஞ்சென்ற திரு. சின்னத்துரை ஆசிரியர் வீட்டுக்கு கிழக்குப்புறமாக 2பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. க. கணேசலிங்கம், 68, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4654

ரேப் அன் றேடியோ, கார் றேடியோ (Two in One) ரி. வி. வீடியோ டெக், கிறைன் டிங் மில் [புதியன] கட்டில், மேசை முதலியன விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. கந்தையா, கற்பகதெரு, ஆனைக்கோட்டை. 4716

புதிய நாஷனல் [NV 7500] வீடியோ டெக், ஹொண்டா ஜெனரேட்டர் (1000 W) உடனடியாக விற்பனைக்குண்டு. G. வில்லியம், அலுக்கைச் சந்தி, அளவெட்டி. 4711

கமிஷனுக்கு

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் மொத்த சில்லறை வியாபாரத்துக்குரிய கடை கமிஷனுக்குண்டு. எழுத்தில் தொடர்புகொள்க. விளம்பர இல: 4705 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4705

காணவில்லை

தெல்லிப்பழை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட உதுமா நாச்சி என்பவரைக் காணவில்லை. இவர் ஒரு மன நோயாளி. அடையாளம் 6 அடி உயரம். பொதுநிறம் சிவப்பு நிறச்சாறியில் பச்சை, மஞ்சள், வெள்ளை நிறங்கள் உண்டு. இவர் முட்டாக்கு அணிந்திருப்பார். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். S. A. இஸ்மாயில், 406, திருநகர், கிளிநொச்சி. 4720

17 வயது தோற்றத்தையுடைய 13 வயது நிரம்பிய கிளிவெட்டியைச் சேர்ந்த சி. உதயகுமார் என்பவர் அல்வாயிலிருந்து நெல்லியடிக்கு சென்றவரை 21-7-85 முதல் காணவில்லை. விபரம் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: Mrs. க. சரஸ்வதி, கடை, அல்வாய் வடக்கு, அல்வாய். 4723

தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம் உயர் விலைக்குப் பெறப்படும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ்.ரோட், யாழ்ப்பாணம். 4677

தவறிவிட்டது

இல: 528403115X கதிர வேலு மலர்மகள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "காகோ" மரக்காலை, இல: 104, சட்ட நாதர் ரோட், நல்லூரிலுள்ள அவரது இல்லத்துக்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல. 22873. 4715

2-வது பிறந்ததின வாழ்த்து செல்வன் ஸ்ரீதவவேல்

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தவேல் மங்கயற்கரசி தம்பதிகளின் தவப்புதல்வன் ஸ்ரீதவவேல் இன்று (29ம் திகதி) இரண்டாவது பிறந்த தினத்தை "ஸ்ரீமங்கை" இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பாச்சி, பாட்டா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், அக்காமார், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அன்ரிமார், உற்றார், உறவினர் இறைவன் அருள் பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள். (4702)

மீண்டும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வழங்கல் வடிகால் ஆராய்ச்சிச் சபை நிலையத்தில் 3ம் தடவையாகவும் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது.

கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன முடிவுத் திகதி 07-08-1985 புதன்கிழமை முற்பகல் 12-00 மணிக்கு. விண்ணப்பப் பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பொருட்கள் விபரம்:

1. தரம்பிரிக்கப்பட்ட வெற்றுச் சாக்குகள்-3118.
2. உபயோகித்த லொறி ரயர் (8.25x20]-40.
3. உபயோகித்த 45 கலன் வெற்றுத்தகரம்-13.

பொது முகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு.
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1985-07-27. (4714)

பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் பெண் இராணி என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயதிக்கம் } இல. ரி/240

வல்லிபுரம் பொன்னம்பலம் அம்பனை தெல்லிப்பழை.

—மனுதார்

எதிராக

1. பொன்னம்பலம் மகள் மந்தினி,
2. பொன்னம்பலம் விவேகானந்தராசா,
3. பொன்னம்பலம் மகள் நளினி
4. பொன்னம்பலம் மகள் நந்தினி,
5. பொன்னம்பலம் மகள் மாலினி [பராயமற்ற 4ம் 5ம் எதிர்மனுதாரர்கள் தமது வழக்கு நண்பன் 1ம் எதிர்மனுதார் மூலம்] எல்லோரும் தெல்லிப்பழை

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 07-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு வைகாசி 17ந் திகதி.

நீதிமன்றக் ஆணைப்படி

ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு
செ. புண்ணியமூர்த்தி
மனுதாரின் சட்டத்தரணி,
அளவெட்டி. 4636

★ இன்று கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் 8ம் திருவிழா

அம்புஜாசனத்து அம்பிகையே!

பொருளே பொருள்முடிக்கும் போகமே
அரும்போகம் செய்யும்
மருளே மருவில்வரும் தெருளே
என்மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன்
அம்புஜாசனத்து அம்பிகையே

அன்னையின் மகோற்சவம் சிறக்கப்பிரார்திக்கின்றோம்.

யாழினி ஜுவல்ஸ்,
244, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ இன்று கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் 8-ம் திருவிழா.

தாயே சரணம்

மூலக்கனலே சரணம் சரணம்
முடியாமுதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத்திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக்குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

அன்னையின் மகோற்சவம் சிறக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பாரத் ஸ்ரூடியோ,
82/1, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
22152

பாரத்சென்ரர்
178, நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
24265

உழவு இயந்திரசேவை கேள்வி விளம்பரம்

தேசிய உப்புக் கூட்டுத்தாபன, ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் பாத்திகளில் சேகரிக்கப்பட்ட உப்பை மேடைக்கு ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள், உழவு இயந்திர சொந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுமுன் மேற்படி உப்பளங்களின் நிலையையும், வேலைபற்றிய விபரங்களையும் நேரில் கேட்டறியலாம்.

கேள்வி விண்ணப் பத்திரங்கள் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 10-8-85 காலை 10 மணி.

பிராந்திய முகாமையாளர்,
வடபிராந்தியம்.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு, 25-7-1985. [4717]

இரண்டாவது ஆண்டு பிறந்த தின வாழ்த்து

செல்வன் துஷாந்தன் (துஷா)

வசாவிளான் தம்பாலை வீதியைச் சேர்ந்த உதயகுமாரன் - சுசீலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் துஷாந்தன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (29-07-85) அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, ஏழாலை அப்பம்மா, மாமி மணிமேகலா, சுசி மச்சாள், வசாவிளான் அப்பப்பா, அம்மம்மா, ரோகினிச் சித்தி, பேபி மச்சாள், சுதர்சன் அண்ணா, கனடா உருத்திரா சித்தப்பா, சுவிற்சலாந்து ரவி மாமா, லொட்டி அன்ரி, மன்னார் பெரியப்பா, பெரியம்மா, சுகு அண்ணா, சுகந்தி அக்கா, தர்ஷி அக்கா, பெரிய மாமா, மாமி, மச்சான் ராஜ்குமார், நிசாந்தி மச்சாள், சாந்தி மாமா, கமலா அன்ரி, மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஈசன் திருவருள் பெற்று, நோய் நொடியின்றி பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ ஆசிகள் கூறி வாழ்த்துகின்றார்கள். 4718

ஈராண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா திருநாவுக்கரசு

தோற்றம்: 24-12-1950

மறைவு: 29-7-1983

நீ எம்மைப் பிரிந்து ஈராண்டுகள் கழிந்து விட்டன. ஆயினும் உன் அன்பு நிறைந்த இன்முகத்தின் புன்முறுவல் 'ஈட்டி'யாக எம் மனதில் பாய்ந்து நிற்கின்றது. உனது இனிய நினைவுகளுக்கு எமது மனம் நிறைந்த அஞ்சலிகள்.

பெற்றோர்,
சகோதர சகோதரிகள்.
கொக்குவில் கிழக்கு. (4722)

மனைவி,
பிள்ளைகள்.
சுன்னாகம்.

மணிவாக்கு

இலன் என்னு மெவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

— குறள்

நமது நோக்கு

எண்ணத்தின் பாதையில் மனம்பதியட்டும்

நாம் ஒரு மிகப்பழமையான சமூகம்; இந்த நாட்டில் வாழும் இரு பெரும் சமூகங்களும் மிகப்பழமையானவை. இது பேருண்மையானாலும் இலகுவில் புறக்கணிக்கப்படாத உண்மையானாலும் இன்றுநாடளவில் தாங்க முடியாத சுமையாகவிருக்கிறது.

சிங்கள பௌத்தம் என்றும் போதெல்லாம் சங்கமே இந்தநாட்டைப் பாதுகாத்துவந்த வருகின்றவரும் பசரியசக்தி என்ற ஆர்ப்பாட்டம் எழுகிறது.

தமிழர் தாம் இழந்த உரிமைகளைப்பெற எடுக்கும் நடவடிக்கைகள் இன்று பயங்கரவாதமென்று அரசு முடிவு கட்டியிருக்கிறது.

சன்னி நோயில் எழுந்த பிதற்றலால், சிங்கள பௌத்த தீவிரவாதத்துக்கும், தமிழர் ''பயங்கரவாத''தீதுக்கும் வேற்றுமை காண முடியவில்லை.

பேச்சாலே,பாராளுமன்ற பரிகாரத்தினுலே, எழுச்சிமாநாடுகளாலே ஆட்சிகளுக்கு உண்மை உணர்த்த முடியாத கட்டம் அதனைத் தொடர்ந்தெழுந்த கலவரம் — இவை நெடுங்கால நோயாக இருந்ததால், சூடு கொண்ட இளைஞர் கூட்டம் ஒட்ட முடியாத பாட்டை வெட்டிப்பாட முயல்கின்றனர். ஆற்றலும் கொண்டிருப்பதை உலகும் அறிந்திருக்கிறது.

இந்த வல்லமைதான் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ, தமிழ் மக்களுக்கோ, நிரந்தர சமாதானம் ஏற்படுத்துமென்று நாம் நம்பவில்லை.

பேச்சில் வல்லமை பிறக்க வில்லையென்றால், செயலில் அது பிறந்திருக்கிறது.

செயலுக்கும், பேச்சுக்கும் அத்திபாரமாயுள்ளது சிந்தனை.

துப்பாக்கியிலிருந்தே அதிகாரம் பிறக்கிறதென்றும், குண்டுகள் சொன்னது கேட்குமென்றும் முடிந்த முடிவுக்கு சிந்தனைத்திறன் ஆதரவளிக்காது.

''எண்ணத்தின் எண்ணத்தில்தான் உயிரின் நிறம் தீர்மானிக்கப்படுகிறது. எண்ணத்தின் பாதையில்தான் மனம் பதிகிறது'' என்று ரோமாபுரி ஞானி மார்க்கஸ் ஒளரேலியஸ் எழுதியுள்ளார்.

இன்றைய உலகில் இது ஒரு உழுத்த வேதாந்தம் போல் தோன்றும். ஆனால் ஞானி ஒளரேலியஸ் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தின் தலைமையைத்துறந்து தமது ஞானக்கண்ணால் கண்ட உண்மை எண்ணத்துக்கு முதலிடம் அளிக்கிறது.

துப்பாக்கியையும் போரையும் அவர் வெறுக்க, அவரிருல் அடைந்த வெற்றியை வெறுமையாகக் கணிக்க போதிய ஞானம் உண்டானதே அவருடைய அறிவுரைக்கு மதிப்பளிக்கிறது.

'வாளால் வென்ற வெற்றியெல்லாம் வாளால்தோல்வியாகின்றது' என்பதையும் நாம் இன்றைய உலகின் அனுபவமாகக் கொள்ளலாம்.

துப்பாக்கிக்கும் குண்டுக்கும் அபாரமான இடம் இன்று உலகில் எங்கும் காணப்படுகிறது.

யார், எதற்காக, எந்த நோக்கத்துக்கு இவற்றைப் பிரயோகித்தாலும், அதற்கு மாருனவர் அதேயப் பயங்கரவாதம் என்று சொல்லித் தமது கட்சிக்கு ஆள் சேர்க்கின்றனர்.

இந்தச் சின்ன நாட்டைப் பொறுத்தளவில் இந்த ஆள் சேர்ப்பு அதிகம் பலனளிக்க வில்லை. பஞ்சாப் பிரச்னையில் நம்பியிருந்த நாம் இன்று ஏமாற்றம் காணவேண்டியிருக்கிறது. உண்மை எதிகிருக்கென்பது அரசுக்கும் தெரியவந்திருக்கிறது. அரசியல் சூழ்ச்சியால் ராணுவ பலத்தால் பொய்யை மெய்யாக்குவது அசாத்தியமென்பதும் தெரியவந்திருக்கிறது.

இன்று கண்டியில் நடைபெறும் பெரஹராவும், கொழும்பில் ஆரம்பமாகும் வேல்விழாவும் தமிழ் மக்களின் இரத்த வெள்ளம் வற்றிவிட்டதாக உலகம் கருதுமளவிற்கு கோலாகலம் கொண்டிருக்கின்றன.

இந்தப் புறவேடம் எண்ணத்தின் பாதையில் ஆட்சியின் மனம் பதிந்ததாகக் கொள்ள இடமளிக்காது.

எனவே நிம்புவுக்கு சமாதானம் பேசத் திரும்புவதானுல் சன்னி இங்கே முறிய வேண்டும்.

எதிர்க்கட்சிகள், தமிழ்ப் பயங்கரவாதிகள், கொலைகாரர் என்று திட்டும் செயல் தொடர்வதனுல் நோய் முற்றியிருப்பது முடிவு.

ஆட்சிக்குள் இருக்கும் எதிர்க்கட்சியைவிட வேறு ஏது? தமிழர் கொலைகாரரென்றுல், இன்று அவர்கள் பட்ட அழிவுடன் அந்த இனமே அழிந்திருக்கும்.

ஆட்சிக்கு மனந்திரும்பும் காலம் கிட்டிவிட்டது. சன்னி முறிய ஒரு குறிப்பிட்டகால எல்லை உண்டு.

அது நிறைவேறினுல் ஜனதிபதி ஜெயவர்த்தனு கூறியதுபோல் கொத்தமல்லிக் குடிநீர் மிச்சம் சொச்சத்துக்குப் போதுமானது.

துண்டிப்பு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கான தொலைபேசி தொடர்பு பலமாதங்களாக துண்டிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்கும், கடும் நோயாளரை இங்கிருந்து யாழ். அரசினர் வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பிவைப்பதற்கும் தொலைபேசிமூலம் தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு மீண்டும் தொலைபேசி ஏற்படுத்தி தருமாறு வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். மகேசலிங்கம் தபால் தந்தி தொடர்பு திணைக்களத்தை கேட்டுள்ளார்.

உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

பிரிந்தவர் கூடுகின்றனர்; பேசவும் வேண்டுமா?

சீனு

கம்யூனிச உலகில் இரு பெரும் நாடுகளான சோவியத் ரஷ்யாவும் சீனுவும் சில வருடங்களாகப் பிரிந்திருந்தன. முதலாளித்துவப்பேரரசு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவுக்கும் அதன் சகாக்களுக்கும் இது ஒரு தேற்றமளிக்கும் செய்தியாயிருந்தது.

அண்மையில் இவ்விருவரும் தங்கள் பழைய உறவைப் புதுப்பிக்க விரும்பியது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய கம்யூனிசத்தைத் திரிபுவாதமென்று கண்டித்து வந்த சீனுவின் இன்றைய மாற்றம், கம்யூனிச ஏட்டில் எந்த அத்தியாயம் என்று குறிப்பிட முடியாத நிலையில் உள்ளது.

அண்மையில் ஒரு உயர்மட்ட சீன தூதுக்குழு மாஸ்கோ சென்றிருந்தது. இரு நாடுகளின் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கிறது. சீனுவுக்கு மாஸ்கோவில் ஒரு சடுதியான விருப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் பொதுவுடைமைக் கொள்கை என்ற அடிப்படையில் உருவான இருபெரும் சமூகங்கள் ஒரு யுத்தரீதியில் வேறுபாடுகளைக் காணிக்குமென்று நம்ப இடமில்லை. மூன்று விடயங்களில் சீனு ரஷ்யாவில் பகைமை கொண்டிருப்பதற்குக் காரணமாகின்றது: சீன எல்லையில் குவிந்திருக்கும் சோவியத் படை, வியட்நாமுக்கு ரஷ்யா அளித்துவரும் உதவியும், உற்சாகமும், ஆப்கானிஸ்தானில் தங்கியிருக்கும் சோவியத் படை.

அரசியல் ரீதியில் இம்மூன்றும் பாரியபிரச்னைகள். சோவியத் ரஷ்யா இவற்றை இலகுவில் தளர்த்தி சீன நட்பை மீண்டும் பெற முயலுமென்று நம்ப இடமில்லை; ஆனால் அரசியல் சதுரங்கம் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தும் தன்மை இன்று அதிகரித்திருக்கிறது.

சீனு தன் நவீனமயத் திட்டத்தில் பொதுவுடைமைச் சித்தாந்தத்தை எவ்வளவு தூரம் தளர்த்தி வருவதை ரஷ்யா அவதானிக்கும். அதே சமயம் இன்றைய சீன இளஞ்சந்ததியினர் உலக நாடுகளுடன் உறவை வளர்க்க விரும்புவதும் ஒரு புதிய திருப்பத்துக்கு இடமளிக்கிறது. என்றும் புரட்சி என்பதை அவர்கள் விரும்பவில்லை.

பச்சை மண்ணும் சுட்டமண்ணுமல்ல! வடகொரியா, தென்கொரியா

ரஷ்யா, சீனு இரு வல்லரசுகள். அதுடன் ஐரோப்பிய, ஆசிய நாடுகள் என்ற பேதம்; பொதுவுடைமைச் சித்தாந்தம் அரசியல் ரீதியில் புரட்சிமுறையால் ஏற்பட்டதென்ற ஒற்றுமையே ரஷ்யாவையும், சீனுவையும் பிணைத்திருந்தது. அடிப்படை வேற்றுமைகளின் இந்த ஒற்றுமை எவ்வாறு மீண்டும் இவ்வல்லரசுகளை ஒன்றுபடுத்துமென்பது இன்றைய நிலையில் இலகுவில் சொல்ல முடியாது.

கொரியா குடா நாட்டின் விடயம் வேறுபட்டது! ஒரு தேசம். வடக்கு, தெற்கு என்று பிளவுபட்டு, அமெரிக்க முதலாளித்துவமும், ரஷ்ய கம்யூனிசமும் என்ற பின்னணிச் சக்திகளால் தாக்குண்டு பிரிந்த ஒருதேசம் என்பது அடிப்படை உண்மை. ஒரு தேசம், மொழி, கலை, கலாசார ஒருமைப்பாடு உண்டென்பதால் பிரிந்தவை மீண்டும் கூட பலதடவைகள் எத்தனித்தன.

அரசியல் பிணக்கும், சரிவாதிகார ஆட்சிமுறையும் கம்யூனிச வடகொரியாவையும், முதலாளித்துவ தென்கொரியாவையும் ஒன்றுபடத் தடை செய்கின்றன. இந்த வேற்றுமை நிரந்தரமானதா?

இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில் பிரிந்த இருபகுதிகளும் இன்று தத்தம் பாராளுமன்றப்பிரதிநிதிகள் ஒன்றுகூடி இரண்டு நாடுகளின் இணைந்த பாராளுமன்ற மாநாட்டை எவ்வாறு நடத்தி லாமென்று ஆலோசனை நடத்துகின்றனர். இத்தகைய ஒற்றுமைப்பேச்சு நடைமுறையில் காணப்படுவது இதுவே முதல் தடவை அமெரிக்காவின் அவற்ற ஆதரவு தென்கொரியாவில் இன்று பெரும் அதிருப்தி உண்டு பண்ணுவது குறிப்பிடத்தக்கது.

மேற்கு ஜேர்மனி; கிழக்கு ஜேர்மனி

பிரிந்தவை கூடும் முயற்சிகளில் ஜேர்மனிக்கு இடமில்லையென்று சொல்வது சரிபோல் தெரியும் ஜேர்மனியைத் தூண்டுபோடுவதே இனிமேல் உலக மகாயுத்தம் திரும்பி வராது தடுக்கும் வழி என்ற கொடிய குறுகிய கொள்கை உலகில் மிக பிரபலம் பெற்ற நாட்டுக்கு இந்த துர்க்கதியை ஏற்படுத்தியது.

பல துறைகளில், குறிப்பாக விஞ்ஞானத்திலும், மெய்ஞ்ஞானத்திலும் அகில உலகுக்கும் வழிகாட்டவல்ல ஜேர்மனி ஹிட்லரின் பாசிச கொடுமையால் இரண்டாகப் பிரிந்தது. அவ்வித கொள்கை முற்றாக ஒழிந்து விட்டதா? உகண்டாவில் இன்று நடந்த புரட்சியில் இடிஅமின் மீண்டும் பதவிக்குவர விரும்புகிறார்.

கம்யூனிச கிழக்கு ஜேர்மனி சோஷலிச அமைப்பு நாடுகளிலிருந்து இலகுவில் விலகுவதற்கு மாஸ்கோ இடமளிக்காது; அதேபோல் அமெரிக்க ஆதிக்கத்தில் இருந்து வரும் மேற்கு ஜேர்மனி தன்னுடைய முதலாளித்துவ முன்னேற்றத்துக்கு எவ்வித பங்கமும் ஏற்பட அனுமதியாது. ஆனால் அமெரிக்க ஆதிக்கத்தை மேற்கு ஜேர்மனி விரும்பவில்லை.

கிழக்கோ மேற்கோ நாம் அனைவரும் ஜேர்மனியரே என்ற உள்ளுணர்வு மிகவும் தடிப்பானது. அதுவே முந்தியது. அரசியல் வேறுபாடு பிந்தியது. ஐரோப்பிய நாகரிக எழுச்சிக்கு ஒன்று பட்ட ஜேர்மனி இன்றியமையாதது.

ஒற்றுமையில் வேற்றுமை காணும் போக்கு விசித்திரமானது வாஷிங்டன்

சீனுவும் சோவியத் ரஷ்யாவும் பிரிந்த காலை அதனை நன்முறைப் பயன்படுத்த அமெரிக்கா முயன்றதை ஜனதிபதி நிக்ஸன் பிங்பொங் விளையாட்டுடன் ஆரம்பித்த சீனநட்புறவு நினைவூட்டுகிறது.

செஞ்சீனச்சிற்பி மாவோ எவ்வகையிலும் சீனநட்பிலோ வேற்றுநாடுகளின் தொடர்பிலோ நம்பிக்கை கொள்ளாதவர். ஆனால் இன்று உலக நாடுகள் பலகூறுகப் பிரிகின்றன. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதிலும் பார்க்க

(5ம் பக்கம் பார்க்க)

தென்அளவை முத்துமாரி சித்திரத்தேர் ஏறுகிறாள்

அன்பர்கள் வேண்டும் திருவருள்புரிவதற்குச் சிவசக்தியாகிய அம்பிகை பாரெல்லாம் நிறைந்து எண்ணில்லா வடிவினளாய்க் காட்சிதருகிறாள்; உமை, பார்வதி, மீனாட்சி, விசாலாட்சி, துர்க்கை, திருமகள், கலைமகள் என்னும் வெவ்வேறு வடிவில் விளங்கும் இறைவி முத்துமாரி, மகாமாரி என்னும் நாமங்களைத்தாங்கி, வைத்திய நிபுணரால் அறியமுடியாத நோய்தீர்ப்பவளாகவும், கொடியவர்களை அழித்துத் தர்மத்தை நிலைநிறுத்துபவளாகவும், வேண்டும் சித்திகள் தருபவளாகவும் போற்றப்படுகிறாள். தமிழகத்தில் சமயபுரம் என்னும் இடம் மாரியம்மன் பிரசையின் விசேடமான தலமாகப் பாராட்டப்படுகிறது.

அளவெட்டி தெற்கிலே சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த ஸ்ரீமுத்துமாரியம்மன், வழிப்போக்கில் வந்த கிழப்பெண்ணுக்குக் காட்சிகொட்டினாள். பத்து ஆண்டுகள் மழையின்றி வறண்ட வறுமைக்காலம். பசுக்கூட்டம் மேய்ப்பவனைப் பால் கேட்டான் கிழவி. 'பசுக்கள் பசும்புல்கண்டு பத்து வருடமாகிறது அம்மா பால் எப்படிப்பெறமுடியும் என்றான் மாட்டுக்காரன். மாடுகளைப் பார்த்தாள் கிழவி. எல்லா மாடுகளும் முலைசுரந்து பால் பெருகிநின்றன கிழவி பால் குடித்துத் தாகந்தீர்ந்து வெவ்வேறு அற்புதங்கள் காட்டி வேப்பமரநிழலில் கோயில் கொண்டாள். இத்தகைய ஐதீகம் நிறைந்த இறைவிக்கு ஆரம்பத்தில் கண்ணிறக்கண்ட கல்லே பூசையேற்ற விக்கிரகமாயது. பின்பு காஞ்சிபுரத்திலிருந்து காமாட்சியம்சமான திருவுருவம் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. இன்புப் பூசையும் ஆகம பூசையும் நிகழ்ந்தன. ஆனால் ஆண்டாண்டு தோறும் ஆடு, கோழி பலியிட்டுப் பொங்கலிட்டு விழாவெடுத்தனர். பலிநிறுத்தத்தை ஏற்க முடியாத நிலையில் நிர்வாகம் நடந்தது.

1967ல் இந்த ஆலய பரிபாலனசபைத்தலைவராகக் கடமையாற்றியவர் அமரர் சி. சண்முகநாதன் அவர்கள். அடியாரின் வேண்டுகோளை ஏற்று, மகாபுண்ணியவானுகிய சண்முகநாதன் 1967 தொடக்கமே பலியிடுதலை நிறுத்திக்கொண்டார். பலி நிறுத்தத்தின் பின்பு பக்தர் கூட்டமும் திருத்

(5-ம் பக்கம் பார்க்க)

உகண்டா ஆட்சி மாற்றம்:

இடிஅமின் வரவேற்பு

நாட்டைக் காப்பாற்றப்போகிறாராம்

கம்பாலா, ஜூலை 28

"உகண்டாவை மீண்டும் காப்பாற்ற வேண்டியவனாகவுள்ளேன்" என்று இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இடிஅமின் தெரிவித்துள்ளார்,

உகண்டாவில் அந்நாட்டின் தலைவர் டாக்டர் மில்ட்டன் ஒபோட்டேவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ராய்ட்டர்' செய்திஸ்தாபன நிருபருக்கே மேற்கண்ட கருத்தை இடி அமின் வெளியிட்டார்.

உகண்டாவில் இராணுவப் பிரிவுகளுக்குள் நிலவிய பூசல் பூதாகரமாக வெடித்ததை அடுத்து அங்கே ஆட்சி கவிழ்ப்பு இடம் பெற்றுள்ளது. உகண்டா பிரதம இராணுவத் தளபதிக்கும் இந்நாட்டின் வடபிராந்திய இராணுவத் தளபதிக்குமிடையே பகைமை தோன்றியிருந்தது.

இதனால் உகண்டா இராணுவம் இரு பெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டது. ஆயினும் பல இராணுவ அணிகள் பிரதம தளபதிக்கே தமது விசுவாசத்தை அளித்திருந்தன.

உகண்டா ஜனாதிபதி மில்ட்டன் ஒபோட்டோவும், பிரதம தளபதியும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இதனால் இவ்விருவரும் இந்த இராணுவப் பூசலில் ஒன்றிணைந்தே இருந்தனர்.

இதனையடுத்தே இப்பூசல் நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்கு மளவிற்கு விகாரமடைந்தது. மில்ட்டன் ஒபோட்டோ ஆட்சி கவிழ்க்கப்பட்டதை இடி அமினுக்கு விசுவாசமாக இருந்த சிலரே மீண்டும் ஆட்சியைக்கைப்பேற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

1979ம் ஆண்டு இடி அமினின் சர்வாதிகார ஆட்சி உகண்டாவில் கவிழ்க்கப்பட்டது. இதையடுத்து இவர் இங்கிருந்தும் தப்பி ஓடியிருந்தார்.

அப்போது உடனடியாக இவர் எங்கிருக்கின்றார் என்ற விபரம்தெரிந்திருக்கவில்லை. லிபியாதான் இவருக்கு புகலிடமளித்திருப்பதாகவும், சிலர் இவர் தற்கொலை செய்து கொண்டுவிட்டதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் சவூதி அரேபியாவில் ஜெத்தாநகரிலேயே இடிஅமின் தஞ்சமடைந்துவிட்டார். அங்கிருந்தே இவர் ராய்ட்டர் நிருபருக்கு தாம் மீண்டும் உகண்டாவில் ஆட்சியைப்பொறுப்பேற்கும் எண்ணத்தை வெளியிட்டுவிட்டார். [கி]

பண்டத்தரிப்பில் ஹர்த்தால்

(பண்டத்தரிப்பு)

1983 ஜூலைக்கலவரத்திலும் வெலிக்கடைச் சிறையிலும் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் கடந்த வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் பண்டத்தரிப்புப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதியிலுள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் ஆகிய அனைத்தும் மூடப்பட்டன.

பண்டத்தரிப்புச் சந்தையும் இரு நாட்களாகக் கூடவில்லை. சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வீதித் திருத்தத்திற்கு ரூ. 17 லட்சம் ஒதுக்கீடு

(வேலணை)

ஊர்காவற்றுறை வட்டுக்கோட்டைத் தொகுதிகளில் உள்ள வீதிகளின் திருத்த வேலைகளுக்கென யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் விசேட நிதியில் இருந்து 17 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியினைக் கொண்டு இப்பகுதிகளில் உள்ள வீதிகள் திருத்தம் செய்யப்பட்டு வருவதாக வேலணை பெருந்தெருத்திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் 'ஜோடி' சேர்க்கும் திணைக்களம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் புதிதாக ஜோடிசேர்க்கும்திணைக்களம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 18 மாதங்களுக்கு முன் சிங்கப்பூர்பிரதமர் திரு. லீகுவான் யூவின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களத்திற்கு, 1 லட்சத்து 3 ஆயிரம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திணைக்களம் இதுவரை 6 ஜோடிகளுக்கு திருமணம்செய்துவைத்துள்ளது விரைவில் 12 ஜோடிகளுக்கு திருமணம் செய்யவுள்ளது. அறிவுள்ள சமுதாயத்தை தோற்றுவிக்கும் பணியில் இந்நிறுவனம் செயல்படுவதாக சமூகசேவைத் திணைக்களத்தின் தலைவர், டாக்டர் சலீன் ஒவ் தெரிவித்தார். [கெ]

பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப் பட்டிருக்கும் சந்தேகநபர்களை விடுதலை செய்யும் விடயத்தில் அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளது என்று பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஆதாரமில்லாதவர்களை விடுதலை செய்வதென்று அரசாங்கத்தால் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும், பூஸா முகாமில் உள்ள 678 பேர்களை விடுவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரா)

கம்பராமாயண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலை 7 மணிக்கு அருட்கவி சீ. விநாசித்தம்பி கம்பராமாயண விரிவுரை நிகழ்த்தி வருகிறார். 'இலட்சுமி வந்த இலட்சியம்' என்ற தலைப்பில் இன்று விரிவுரை நிகழும்.

அரிய சந்தர்ப்பம்

புதிய பதிவாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் உள்ளூரிலும் வெளியூரிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஏற்றவாறு

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைய

பின்வரும் பாடநெறிகளுக்கான பகுதிநேரப் பயிற்சியும், போதனையும் 2-8-1985 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

★ கட்டிடப் படம் வரைதல் (Draftsmanship) — 6 மாத காலப் பயிற்சி [ஆங்கிலமூலம்]
★ கடைச்சல் யந்திர இயக்குனர் (Lathe Operator) — 3 மாத காலப் பயிற்சி
★ எலெக்ரிக் வெல்டிங் (Welding Arc) — 3 மாத காலப் பயிற்சி
★ வீட்டு மின் இணைப்பு (Electrical House Wiring) — 3 மாத காலப் பயிற்சி
★ City and Guilds Examination 1986. Electrical Engineering Technicians Part I and II.

மேற்கண்ட பாடநெறிகளுக்கு அதிகளவு செய்முறை அறிமுறை பயிற்சி கொடுக்கப்பட இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்க

பதிவாளர்

Patrician Institute Of Higher Studies

59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் இவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்

(ரெலிகோணர் கிளை)

159, மின்சாரநிலைய வீதி. நவீனசந்தை, யாழ்ப்பாணம். 4633

குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators)

பாவனையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

★ எல்லாவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும், டீப்பிறீசர்களும் எமது அனுபவமிக்க தொழில் நுட்பவல்லுனர்களால் உங்கள் இல்லத்தில் வைத்து பிழைகள் திருத்திக் கொடுக்கப்படும்.

★ விரும்பிய வசீகரமான வர்ணங்களில் எமது வேலைத்தளத்தில் வைத்து செய்துகொடுக்கப்படும்.

எம்மோடு தொடர்புகொண்டு இவ்வரிய சேவைகளை பெற்றுக்கொள்ளவும்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்,

484, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 22134.

2-வது ஆண்டு நினைவஞ்சலி

1983 யூலை வன்செயலின் பொழுது தரணியகலையில் அகால மரணமெய்திய எங்கள் குடும்பத் தலைவர்

உயர்திரு த பாலரெத்தினம் J. P.

(தரணியகலைப் பிரபல வர்த்தகர்)

தோற்றம்: 6-9-1918 மறைவு: 29-7-1983

எதிர்பாராத படுகொலைக்கு நீங்கள் பலியாகி ஆண்டு இரண்டு கழிந்திடினும் அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எல்லோருக்கும் இனியவராய் இருந்து அணைத்து விட்ட சுடரே எம்மை யெல்லாம் என்றென்றும் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு தெய்வத்துடன் சங்கமமான தெய்வமே. நீங்கள்மறைந்துஈராண்டு சென்றாலும் உங்களின் இனிய நினைவுகளை மறக்க முடியாது தவிக்கின்றோம்.

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1ம் வட்டாரம், அனலைதீவு, (4721)

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

2-வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்வமாணிக்கம்
மாயவன் B. Sc.
(ஆசிரியர், நைஜீரியா)

ஆண்டவன் படைப்பு:
1954-06-16

ஆள்பவன் அழிப்பு:
1983-07-29

அறிவுக் கனலே! அருட் புனலே!
ஒழுக்கத்தின் அடையாளச் சின்னமே!
நேர்மையின் உருவமே
எங்கள் உயிருக்கும் உயிராகி பொருளாகி
பாசப்பிணைப்பால்
எம்மை வாழ்வித்த எம் அன்புத் தெய்வமே
எங்களை விட்டு எதிர்பாராமல் பிரிந்துஈராண்டு ஆகியும்
இன்னும் மனவேதனை குறையவில்லை
ஈராண்டுகள் சென்றாலும் உன் இதயத்தில்
குடிகொள்வோம்
எத்தனை துன்பங்கள் வந்தாலும் உன் நினைவே
எங்களுக்கு துணையென்று நம்புவோம்
ஏன் அகிலமே அழிந்தாலும் - மறவோம்
மறவோம் உன்னை! உனதன்பை
மோட்சத்தில் நீ நின்று எங்களுக்கு அருள்புரிவாய்

உனது நினைவால் வாடும்
அன்பு அம்மா,
அன்புத் தங்கைகள்: கலா. செல்வி.

''கலைச்சோலை'',
வறுத்தலை விழான்,
தெல்லிப்பழை. 4582

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப்
போராடும் விடுதலை
வீரர்களின் உணர்ச்சிக்
காவியம்

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு
மட்டும்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/
வெலிங்டன் தியேட்டர்
சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30,
7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு
மட்டும்)

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to
Midnight
(Adults Only)

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30,12-30,2-30,
4-45, 7-00
I spit on your
Grave
(நீ பிணமானலும் நான்
வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம்
பெண்கொடூரமானமுறை
யில் ஒருவர் பின் ஒருவ
ராக கற்பழித்து சித்திர
வதை செய்கிறார்கள். அப்
தப் பெண் தன்னை கற்பழி
த்த அந்த நால்வரையும்
பழிவாங்கும் திரைச்சித்தி
ரம். காணத் தவறாதீர்
கள். சந்தர்ப்பம் மீண்
டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது
வந்தவர்கள் மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45, 9-00
Five Times All China
Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ
கராட்டி வீரசாகசங்கள்
நிறைந்த சின வீரர்களின்
திகிலூட்டும்சம்பவங்களை
நேரில் பார்ப்பதற்கு ஓர்
சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில்
200 நாட்களுக்கு மேல்
ஓடிய படம்)

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாபு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
சண்டமாருதம் கலர்
நியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

"லதா" மினி
(கோண்டாவில்)
X TRO
(Horror)
10-30, 3-30, 6-45
(வயது வந்தவர்களுக்கு
ஏற்றது)

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
10.30, 2.30, 6.30, 9.30
குமாரி சுதா, சுபாகர்
மயூரி
உண்மை சம்பவத்திலி
ருந்து பின்னி படைக்கப்
பட்ட ஓர் இளம் நாட்டியப்
பேரொளியின் கதை.
(புதிய வெளியீடு)

தேவி மினி சினிமா
(கிளிநொச்சி அருகாமை)
10-30, 2-30, 6-30,
நீதியின் நிழல்
சிவாஜி, பிரபு, ராதா,
சந்திரசேகர், சுரேஸ்
(புதிய வெளியீடு)

மேபெயர் மினி
(கன்னதிட்டி)
10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
நேற்று இன்று நாளை

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
KILL ALL KILL AGAIN
— Karatte Film —
முழுநீள கராட்டிச்சண்டை
கள் நிறைந்த பரபரப்பும்,
விறுவிறுப்புமூட்டும் படம்
—இன்று மட்டும்—

மொடேர்ன்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 3 காட்சிகள்
புதிய வெளியீடு
சுரேஸ்-அனிதா நடித்த
உன்னைத் தேடி
வருவேன்

இன்று முதல்
ஹரன் மினி
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
DIE
EROBERER
ஐந்து இளஞ்சிங்கங்
களின் பயங்கர கராட்
டிச் சண்டைகள்
நிறைந்த படம்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p m.
WENG WENG
Impossible
Kid
(Color)
A full action karate
முழு நீள கராட்டி
சண்டைகள் நிறைந்தது.

வின்ஸர் (வாழ்.)
Daily 10-30, 2-00, 4-30,
7-00
CAT PEOPLE
ஒரு பெண் சிறுத்தை
யாக மாறி கோரக்
கொலைகள் புரியும்
பயங்கரக் காட்சிகள்.
திகில், மர்மங்கள்
நிறைந்த விறுவிறுப்
பான வர்ண ஓவியம்.
(புதிய வெளியீடு)
வயது வந்தவர்கட்கு
மட்டும்.

தென்னளவை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் திருப்பணியும் பணம் வழங்கும் வள்ளல்களின் கொடைகளும் அதிகரித்தன.

இதுவரை காலமும் சப்பிர மஞ்சத்தில் மாத்திரம் திரு வுலா வந்த இறைவிக்கு இவ் வாண்டு மகோற்சவத்தின் போது சித்திரத்தேரேறும் புனித தருணம் ஏற்பட்டுள் ளது.

இன்று திங்கட்கிழமை தேர் வெள்ளோட்ட விழாவும் அதனை உருவாக்கிய சிற்பமணி ஆ. சிவரத்தினம் அவர்களைப் பாராட்டும் விழாவும் நிகழ விருக்கின்றன. அடியார்கள் ஸ்ரீ முத்துமாரியை வழிபாடு செய்து இட்டசித்திகள்பெற்று உய்வார்களாக.

அருட்கவி
சி. விநாசித்தம்பி

பிரிந்தவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமையில் வேற்றுமை காண்பது உசிதம் போல் தெரிகிறது.

இன்று சீனு, மாஸ்கோ சந்திப்புக்குப் பின் வாஷிங்டன் சென்றுள்ளது. சீனுவின் பெருந்தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு விஜயம்செய்தது இதுவே முதல் முறை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சீன தூதுக்கோஷ்டிக்கு வரவேற்பளித்தமை ஜனாதிபதி றீகன் இருவாரங்களுக்குமுன் புற்றுநோய்ச் சிகிச்சை பெற்றபின் நடை பெற்ற முதல் வைபவம்.

நோய் முற்றாக குணமடையாத நிலையிலும் சீனத் தலைவர்களுடன் மிக உற்சாகமாக அரசியல், வர்த்தக விடயங்களை ஆராய்ந்தார். தங்கள் இருநாடுகளும் சோவியத் ரஷ்யாவுடன் எத்தகைய தொடர்புகொள்ள வேண்டுமென்ற பிரச்னையே பேச்சுக்களில் முன்னின்றது.

சீன - ரஷ்ய உறவின் புனரமைப்பு அமெரிக்காவுக்கு எவ்விதத்திலுமையையும் ஏற்படுத்தாது. மாஸ்கோ செல்லாத இளம்தலைவர்கள் வாஷிங்டன் வந்த குழுவில் இடம் பெற்றது அமெரிக்க தலைவர்களுக்கு திருப்தி அளித்திருக்கிறது. சீன தலைவர் — உதவிப்பிரதமர் லி-பெங் அங்கு வந்தது வாஷிங்டனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இவரே வருங்காலப் பிரதமர் என்பதே காரணம்.

ரஷ்ய - சீன தொடர்பு எவ்வாறானலும், அமெரிக்க - சீன உறவுகளும் என நம்புகின்றனர்; உலகம் இரண்டாய் மூன்றாய் மட்டுமல்ல பலவாகப் பிரிகின்றது. வேற்றுமையே இன்றைய சுருங்கிவரும் உலகில் ஒரு உண்மை.

அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்வதே சீனுவுடன் முக்கியமிடயமாகக் கருதுகிறது. சீனத்தொழில் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான அணுசக்தியை அமெரிக்கா உதவும் ஒப்பந்தம் இவ் விஜயத்தில் நிறைவேறுமென நம்பப்படுகிறது

அணுசக்தி பிரயோகத்தில் சீனு எந்த ரகசியங்களையும் வேறுநாடுகளுக்கு வெளிவிடமாட்டாதென்ற வாக்குறுதி இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். சீனுவுக்கும் அமெரிக்காவுக்கும் பல பிணக்குகள் இன்னும் உண்டு அவற்றை யெல்லாம் சுமுகமாகத் தீர்த்து வைக்கலாமென்று பெண்டகன் கருதுகிறது.

உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 1-30
4-30, 6-30
NINJA AVENGER
பெண் ஒருத்தி தன்னை
அழிக்கமுனையும் கூட்ட
மொன்றை தனித்தனியாக
கொன்று பழிவாங்கும் விறு
விறுப்பான படம்.

"தமிழ்ப் பகுதிகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு எம்மை நியமியுங்கள்"

பாதிக்கப்பட்ட ஆசிரியர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ்ப் பகுதிகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதால், அவற்றுக்கு பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்துள்ள ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்" என்று பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனுராதபுரத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் யாழ். மலாயன் சங்கக் கட்டிடத்தில் திரு. ஐ. கி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசாங்கதிதைக் கோரும் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அநுராதபுரம் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நிலைமை சீரடைந்ததும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வேலைக்கு செல்லும் காலவரைக்கு விசேட லீவு வழங்கப்படவேண்டும்"

"தமிழ்ப் பகுதிகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதனால் இவ் வெற்றிடங்களுக்கு பாதிக்கப் பட்ட ஆசிரியர்களுக்கு இட மாற்றம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்".

"பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் ஆனி, ஆடி மாத சம்பளங்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்க அதிபருடாக நடவடிக்கை எடுப்பது"

"அநுராதபுரம் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பிரச்னைகளைக்கவனிப்பதற்கு ஐவர் கொண்ட ஆசிரியர் உபகுழு தெரிவு செய்யப் பட்டது"

"பாதிக்கப்பட்ட ஆசிரியர்களினால் கையொப்பம் இடப்படும் மகஜர் ஒன்றை கல்விச் சேவை அமைச்சுக்கு அனுப்பி வைப்பது என்றும் தயாரிக்கப்படும் இம்மகஜரில் கையொப்பம்இடுவதற்காக ஆசிரியர்கள் அனைவரையும் பிரான்ஸ்லி வீதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்பு குழு அலுவலகத்தில் இம்மாதம் 30-ம் திகதி சமுகமளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(மா)

இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-14(29-7-1985)திங்கள்
திதி-துவாதசி மு.ப வரை
நக்ஷத்திரம்-மூலம் மு. இரவு வரை

மேடம்: இதயத்தில் பூரிப்பு தோன்றும்; எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்புக் கிடைக்கும். புத்திரராலும் சுகமுண்டு.

இடபம். இன்று பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். போக்குவரத்திலும் நிதானம் நன்று. எதிரிகளும் எக்காளமிடுவர்.

மிதுனம்: குடும்பத்திலும் சோர்வு தென்படும். வரவிலும் சிறப்புக்குன்றும்; தொழில் விடயத்திலும் தொல்லை ஏற்படும்.

கடகம்: நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இன்று தலைதூக்கும், எம்முறையோராயினும் நம்பி நடக்கக்கூடாதாம்.

சிங்கம்: புண்ணிய கருமங்களில் ஈடுபாடு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புகழ்தரும் விடயங்களும் நடைபெறும்.

கன்னி; தொழில் நிலை மந்தமாகவே இருக்கும். கடற் றொழிலாளர்கள் இன்று கவனம் தன்று. வியாபாரிகள் அதிக முதலீட்டை தவிர்க்கவும்.

துலாம்; இன்று பெண்கள் அதிக கவனம் வேண்டும். இனசனக் கொண்டாட்டங்களுடன் விருந்துபசாரங்களும் உண்டு.

விருச்சிகம்: பூமிப் பிணக்குகளுக்கும்இடமுண்டு. பொருட் செலவும் உண்டு. எவ்விடயத்திலும் இன்று கவனம் வேண்டும்.

தனுசு: அலுச்சலுடன் செலவுக்கும் இடம் ஏற்படும். குடும்பத்திலும் சிறு பிணி வாட்டும். தெய்வ வழிபாடு நன்று.

மகரம்: எதிர்பார்த்த விடயம் சோர்வைத்தரும். எண்ணத்திலும் தடுமாற்றம் தோன்றும். நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

கும்பம்: குறிப்பிட்ட ஒரு விடயமாக கவலைப்படநேரும். குறுக்குவழித் தலையிடு தவிர்க்கப்படல் வேண்டும் குழந்தை யொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

மீனம்: அன்னை சுகக்குறைவும் உண்டு. அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் எத்தனிப்பர். அயலவர்களின் ஆதரவும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

வதிரி திருஇருதயக் கல்லூரி,
கரவெட்டி
பழைய மாணவர் சங்க
அங்குரார்ப்பணக் கூட்டம்
27-10-1985 பி. ப. 3 மணி.
பழைய மாணவர் தயவுசெய்து அதிபருடன்
தொடர்புகொள்க. (4670)

2வது ஆண்டு நினைவஞ்சலி

க. அருமைநாயகம்

(வரிமதிப்பிட்டாளர்

பூவுலகு: 30- 12- 1939.
விண்ணுலகு: 29- 7- 1983.

வீட்டினர் தமையும் மற்றும்
அயல் சுற்றம் தன்னையும் என்றும்
காட்டிய அன்பினுலே
கவர்ந்தனை தெய்வமே நீ!
ஈட்டிய புகழும் நின்றன்
இணையிலா உழைப்பும் கண்டோம்
நாட்பல வாழ்திடாதே
நமைவிட்டாய் வருந்துகின்றோம்.
மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்,
கட்டுவன் தெற்கு, ஏழாலை. 4725

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

"எழுந்து வருவோம் எம்மக்களை மீட்க"

வெலிக்கடை மரணங்களுக்கு மருதனாமடத்தில் நினைவுச்சின்னம்

(யாழ்ப்பாணம்)

83 ஜூலை இனக்கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொலையுண்ட தமிழ்த் தீவிரவாதிகளின் ஞாபகார்த்தமாக மருதனாமடம் சந்தியில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருதனாமடம் சந்தியின் வடகிழக்குப் பக்கமாக இராமனாதன் மகளிர் கல்லூரி மதிற்சுவருக்கு அருகாமையில் தபால்பெட்டிக்கும் பஸ்தரிப்பு நிலையத்துக்கும் இடையே இந்த நினைவுச் சின்னம் அமைந்துள்ளது.

இச்சின்னத்தின் புனிதம் கெடாமல் இருப்பதற்காக சுற்றிவர கற்றூண்கள் எழுப்பப்பட்டு அவற்றில் பாரிய இரும்புச் சங்கிலிகள் தொடுக்கப்பட்டுள்ளன

"83 கறுத்த ஜூலை நடந்த வெலிக்கடை இனப் படுகொலைகளின் 2-ம் ஆண்டு இரத்தாஞ்சலி சாசனம் 27-7-85" —இவ்வாறு மாபிள் கல்லிலான நினைவுச் சின்னத்தில் எழுதப்பட்டுள்ளது. சின்னத்தின் அடிப்பாகத்தில் "எழுந்து வருவோம் எம்மண்ணை மீட்க" என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

நினைவுச் சின்னத்தின் மீது நறுமணம் கமழும் மலர்கள் தூவப்பட்டிருந்தன மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. இருமருங்கும் வாழைகள் நாட்டப்பட்டு மகரதோரணங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. மலர் வளையங்களும் வைக்கப்பட்டிருந்தன.

—ஏ வி.எம்.

முல்லைத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள அகதிகள் 5 பாடசாலைகளில் இன்னமும் இருந்து வருவதால் அப்பாடசாலைகளில் கல்விபயின்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளில் இருநேரப் பகுதியாக்கப்பட்டு கல்விபயில வசதிசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

வகுப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு இல்லாததினால், சுற்றாடலிலுள்ள பெற்றோரின் வசதி கருதி யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கு இருபாலாரையும் அனுமதிப்பதனால், பெண்பிள்ளைகள் தொடர்ந்து வேம்படி மகளிர் கல்லூரியிலும், ஆண்பிள்ளைகள் தொடர்ந்து யாழ்ப்பாணம் கல்லூரியிலும் கற்க வசதியாக இப்போதுள்ள வகுப்புகளின் எண்ணிக்கையை அதற்கேற்றவாறு அதிகரிக்கப்பட வேண்டும்" என்னும் தீர்மானம் யாழ். மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க 1985-ம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

தலைவர் திரு. வே. பாலசுந்தரம் (அதிபர்) பொதுச்செயலாளர் திரு கி. இராசதுரை (கல்லூரியின் பழைய மாணவர், பெற்றார், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய உப அதிபர்) பொருளாளர் திரு. கே. சந்தசாமி [கல்லூரியின் பழைய மாணவர், பெற்றார்)

18 பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126

"பாதிக்கப்பட்ட

தபாலக ஊழியருக்கு நிவாரணம் வழங்குக!"

சுற்றுநிருபத்தை நினைவூட்டி சங்கத்தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கையின் போதும், குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போதும் பாதிக்கப்பட்ட தபாலக ஊழியர், உத்தியோகத்தர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு தபால் - தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளரை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கம் கோரியுள்ளது

அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கம், தபால் தொலைத் தொடர்பு அமைச்சுச் செயலாளர் திரு ஏ ஆர். எம். ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிவைத்த அவசரக் கடிதத்தில், இவ்வருட ஜூன் மாதம் 19ம் திகதி வெளியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின்படி கடமை நேரத்தில் பலியாகும் அல்லது காயமடையும் தபால் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிவாரணப் பணத்தைப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக வழங்குமாறும் கோரியுள்ளது.

முருங்கனில் இராணுவ நடவடிக்கையின்போது முருங்கன் தபாலகத்தில் கடமையாற்றிய ஐவர் பலியானார்கள் என்றும், ஒருவர் காயமடைந்தார் என்றும், நடமாடும் தபால் (ரயில்) வண்டியில் 83-ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதி ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் பலியானார்கள்; இருவர் காயமடைந்தனர் என்றும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் தொலைதொடர் உத்தியோகத்தர் சங்கத்தின் (தாய்ச் சங்க) தலைவர் திரு. உபாலி எஸ். ஜெயசேகரா மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இரண்டரை இலட்சம் ரூபா தங்க கடத்தல் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்]

சுமார் இரண்டரை லட்சம் பெறுமதியான தங்கக் கடத்தல் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்தே இக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை பெண்ணொருவர் 6 தங்கப்பாளங்களை இந்தியாவுக்குக் கடத்திச் செல்வதற்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மறைத்து வைத்திருந்த போது சுங்க அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டாராம்

விசாரணையின் பின்னர் தங்கப்பாளங்களைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட அதிகாரிகள் 7 லட்சம் ரூபா அபராதம் விதித்தனர் (மா)

ராஜீவின்....

(1-ம பக்கத்தொடர்ச்சி)

படவில்லை இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றினையே தாம் நாடுவதாகவும், இராணுவத் தீர்வை விரும்பவில்லை என்றும், தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை தாங்கள் கைவிடவில்லை என்றும் கூறினார்.

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்காக இந்திய அரசு செய்துவரும் முயற்சிகளையிட்டு பாராட்டிய அவர், பஞ்சாப் பிரச்னையை தீர்க்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி காட்டிய அக்கறையையும் ராஜதந்திரத்தையும் இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனா கடைப்பிடித்தால் தான் இலங்கை தமிழர் பிரச்னையை தீர்க்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு படையினருக்கு

பாகிஸ்தானில் விசேட பயிற்சி

(புதுடில்லி)

இலங்கை ராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் விஷேடபயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி தீவிரவாத செயல்களை முறியடித்தல் கெரில்லா போர் முறை போன்ற முக்கிய அம்சங்களை கொண்டிருக்கும்என்று நம்பத்தகுந்த வட்டரங்கள் மூலம் தெரியவருகிறது.

தீவிரதிட்டம் ஒன்றின் கீழ் முதல்கட்டமாக 30 அதிகாரிகள் நான்கு வாரகால பயிற்சியிலும் 200 இராணுவத்தினர் எட்டுவாரகாலப் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளனர்.

இரண்டாவது கட்டமாக ஒவ்வொரு குழுவும் 60 இராணுவத்தினர் வீதம் மொத்தம் 240 பேர் கொண்ட மற்றொரு குழு 2 ஆண்டு காலத்தில் 6 மாதகால பயிற்சியினை பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ரா)

ராணுவம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது கண்டனம் தெரிவித்துள்ளார்.

நிருபர்கள் மத்தியில் தொடர்ந்து பேசிய அவர் இலங்கை இனப்பிரச்னை தீர்வினுக்காக மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ரா)

தேசிய பாதுகாப்பு நிதி

சம்பளத்தில் கழித்தமைக்கு தோ.தொழிலாளர் ஆட்சேபம்

(எகலியகொட]

தமது அனுமதியின்றிதேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கழித்தமைக்காக எகலியகொடை சண்டர் லேன்ட்' அரச பெருந்தோட்டத்தின் பேருவானப் பிரிவுத் தொழிலாளர் கடும்ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஐக்கியலங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் அங்கத்தவர்களாக இருக்கும் மேற்படி தொழிலாளர் எழுத்துமூலம் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக ஐக்கிய லங்காதோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர் திரு. வி எஸ் மணியம் தாய்ச்சங்கத்திடம் புகார்செய்துள்ளார். (மா)

கொழும்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உதவிசெய்தனர்.

ரயில் முழுவதும் ஒட்டப்பட்ட போஸ்டர்களில்: "நாங்கள் தமிழீழத்திற்காகப் போராடுகிறோம்; தமிழீழத்தை அடைவதே எங்கள் குறிக்கோளாகும். நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. இதனைச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் பூட்டான் பேச்சுக்களில் எங்களுக்கு நம்பிக்கையில்லை" என்ற சுலோகங்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்ததாம்.

ஜீப் கடத்தல்

(கிண்ணியா)

பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் ஒன்று அதிலிருந்த நான்கு உத்தியோகத்தர்களுடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

ஜீப்பைக் கடத்திய இனந்தெரியாக நபர்கள், ஜீப்பிலிருந்த அவ்வுத்தியோகத்தர்களைப் பின்னர் இறக்கிவிட்டு, ஜீப்பைக் கொண்டுசென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

எதிர்வரும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்க வேண்டியவர்களாகவுள்ளனர். தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடான அல்லது சமமான இனப்பிரச்னைக்கான சமரத்தீர்வை அவர்களே முன்வைக்க வேண்டும்.

எதிர்வரும் 'திம்பு' பேசிச்ல் அவர்களது புதிய யோசனைகளையே கூட்டணி ஆவலுடன் எதிர்பார்க்கும். (கி)

உதவிகள்

(சென்னை)

முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு இலவச கல்வி, இலவச பாடப் புத்தகம் என்பவற்றை கொடுத்து உதவுமாறு தமிழக மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப் புத்துறை அமைச்சர் திரு. டீ. இராமசாமி மறுவாழ்வுத் துறைஅதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

அடுத்தமாதம் இறுதிக்குள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விடுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரா)

சமஷ்டி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு நல்ல ஒரு முடிவினை எடுக்க முன்வரவேண்டும் என்றும் அடுத்த மாதம் 12 ம் திகதி திம்புவில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையில் அது பிரதிபலிக்க வேண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.